சுபீட்சம்
SUPEEDSAM
EVERYTHING FOR PEOPLE
நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
திங்கட்கிழமை 03.05.2021
supeedsam.com
supeedsam@gmail.com




# மட்டக்களப்பை அச்சுறுத்தும் கொரோனா திசவீரசிங்கம் பகுதி முடக்கம்

## 24 மணித்தியாலத்தில் 32 பேருக்கு தொற்று



(மட்டுநிருபர்)

மட்டக்களப்பு நகர் பகுதியில் 11 பேருக்கு கொரோனா தொற்று உறுதியானதையடுத்து திசவீரசிங்கம் சதுக்கம் மேற்கு பகுதியிலுள்ள 3 குறுக்கு வீதிகள் முடக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கணவதிப்பிள்ளை கருணாகரன் தெரிவித்துள்ளார்.

கடந்த 24 மணித்தியாலயத்தில் மாவட்டத்தில் 32 பேருக்கு

02 ஆம் பக்கத்தில்...

## 10 வருடங்களுக்கு பின்னர் தமிழகத்தில் உதயமானது உதயசூரியன்



கடந்த 10 ஆண்டுகால போராட்டத்திற்குப் பின்னர் தமிழகத்தில் ஆட்சியைப் பிடித்திருக்கிறது மு.க. ஸ்டாலின் தலைமையிலான திமுக.

தமிழ் நாடு, புதுச்சேரி, கேரளா, மேற்கு

02 ஆம் பக்கத்தில்...

## 8 மாவட்டங்களில் நிலைமை மிக மோசம்

இலங்கையில் 8 மாவட்டங்களில் கோவிட் 19 வைரஸ் பரவல் மிக மோசமாக இருப்பதாக சுகாதார தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, குருணாகல், கண்டி, மாத்தளை, மொனராகலை,

02 ஆம் பக்கத்தில்...

## அதிகாரிகளின் அசமந்தப்போக்கால் கிழக்கில் வீணான 600 தடுப்பூசிகள்

(ஊர்காவலன்)

கிழக்கு மாகாணத்தில் பிரபல அரசவைத்தியசாலையொன்றில் 600 பேருக்கு ஏற்றக்கூடிய கொவிட் தடுப்பூசி அதிகாரிகளின் அசமந்தப்போக்கினால் வீணாகிப்போன சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

மாகாணத்தில் நேற்று முன்தினம் இரண்டாம் கட்ட

02 ஆம் பக்கத்தில்...

## கிழக்கில் கொவிட் மூன்றாவது அலை 09 மரணங்கள்

(படுவான்பாலகன்)

கிழக்கு மாகாணத்தில் மூன்றாவது கொவிட் அலையின் பின்னர் இதுவரை

02 ஆம் பக்கத்தில்...

## மட்டு.தனியார் ஆடைத்தொழிற்சாலையில் தொழில்புரியும் இளம் யுவதி தூக்கிட்டு தற்கொலை

(மட்டுநிருபர்)


ஏறாவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அந்தோனியார் வீதி களுவஞ்கேணி பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய நடராசாவிதுசாஜினி என்பவர் தனக்குத்தானே தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட நிலையில் சடலமாக நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த நான்கு வருடகாலமாக

02 ஆம் பக்கத்தில்...

## ஸ்டாலின் தலைமையில் தமிழக ஆட்சி!

### தமிழினம் விடுதலை பெறும்; மாவை நம்பிக்கை



திமுக தலைமையில் கூட்டணிக் கட்சிகள் பெரு வெற்றி பெற்றமை இலங்கைத் தமிழர்களுக்குப் பெரு மகிழ்ச்சியேதான் என இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...







## திமுகவின் வெற்றி இலங்கை தமிழர்களுக்கு அர்த்தமுள்ள வெற்றியாக அமையும்



(க.கிஷாந்தன்)

இலங்கையில் புரையோடி போயுள்ள இனப்பிரச்சினைக்கு திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைவர் மு.க ஸ்டாலின் தீர்வை வழங்க ஒத்துழைக்க வேண்டும் என மலையக மக்கள்

02 ஆம் பக்கத்தில்...




## தமிழர் உணர்வாழ்வு அமைப்பின் தலைவர் மோகன் பயங்கரவாத தடைச் சட்டத்தில் கைது



(ஊர்காவலன்)

விடுதலைப்புலிகளை மீண்டும் முகநூல் வாயிலாக புதுப்பித்த குற்றச்சாட்டில் தமிழர் உணர்வாழ்வு அமைப்பின் தலைவர் க.மோகன்

02 ஆம் பக்கத்தில்...

## குறிஞ்சாக்கேணி பாலத்தின் தற்காலிக படகு சேவையை இலவசமாக வழங்க கோரிக்கை



(எப்.முபாரக்)

கிண்ணியா நகர சபையையும் கிண்ணியா பிரதேச சபையையும் இணைக்கும் குறிஞ்சாக்கேணி பாலம் முழுமையாக உடைக்கப்பட்டு, தற்போது புதிதாக பாலம் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

02 ஆம் பக்கத்தில்...







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8 மாவட்டங்களில் நிலைமை மிக மோசம்

ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் கொரோனா பரவல் வரும் நாட்களில் பாரதூரமானதக இருக்கும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

இந்த மாவட்டங்களில் காணப்படும் தொற்று நோய் பரவல் நிலைமையானது ஏனைய மாவட்டங்களில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும் என அந்த சங்கம், அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளது.

குறித்த மாவட்டங்கிளல் சரியான பரிசோதனைகளை நடத்தி தொற்றாளர்களை வைத்தியசாலைகளில் அனுமதிப்பது மற்றும் அவர்களுடன் தொடர்பில் இருந்தவர்களை அடையாளம் காண்பது என்பனவும் தாமதமாகி இருப்பதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் உதவி செயலாளர் நவின் டி சொய்சா தெரிவித்துள்ளார்.

இந்த பாரதூரமான நிலைமையில் இருந்து தப்பிக்க உடனடியாக பயண தடைகள் விதிக்கப்பட வேண்டும் எனவும் சுகாதார ஆலோசனைகளை சரியாக நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் அந்த சங்கம் அரசாங்கத்திடம் சுட்டிக் காட்டியுள்ளது.










## கிழக்கில் கொவிட் மூன்றாவது அலை 09 மரணங்கள்

9பேர் மரணித்துள்ளதாக மாகாணதிணைக்களம் தெரிவித்துள்ளது. இதில் திருகோணமலைமாவட்டத்தில் எட்டுப் பேரும் உகணசுகாதாரப்பிரிவில் ஒருவருமென பதிவாகியுள்ளது.

மூன்றாவது அலையின் பின்னர் கிழக்கில் இதுவரை 1151பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். தொற்றுக்குள்ளானவர்களில் 908பேர் தொடர்ந்து சிகிச்சைபெற்றுவருகின்றனர்.

நேற்று மட்டும் 53பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். இதில் அம்பாறையில் 26பேரும், திருகோணமலை 19 ,மட்டக்களப்பு 07 ,கல்முனை 01 என பதிவாகியுள்ளது.

## தமிழர் உணர்வாழ்வு அமைப்பின் தலைவர் மோகன் பயங்கரவத

நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு மட்டக்களப்பு செங்கலடியில் உள்ள அவரது வீட்டில் வைத்து பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

குறித்த நபர் முகநூல் வழியாக விடுதலைப் புலிகள் மீண்டும் புதிப்பித்தல் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்துள்ளதாக குற்றச்சாட்டின் பேரில் 3 மாதகால பொலிஸ் தடுப்பு காவலில் வைத்து விசாரணை செய்ய நீதிமன்ற அனுமதியினை பெற்று அவரை நேற்று இரவு அவரது வீட்டில் வைத்து கைது செய்து ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்து விசாரணை இடம்பெற்று வருவதாக பொலிசார் தெரிவித்தனர்.

## அதிகாரிகளின் அசமந்தப்போக்கால் கிழக்கில் வீணான

தடுப்பூசிகள் ஏற்றப்பட்ட நிலையில் தடுப்பூசிகள் ஏற்றப்பட்ட பின்பு 57 மருந்து நிரப்பப்பட்ட குப்பிகள் குளிர்சாதன பெட்டிக்குள் வைக்காமல் வெளியில் வைக்கப்பட்டு செல்லப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை ஐந்து மணிக்கு வைக்கப்பட்ட மருந்து குப்பிகள் நேற்று காலை எட்டு மணிவரை குளிர்சாதனப் பெட்டியில் இல்லாமல் வெளியில் இருந்துள்ளது. இதனால் குறிப்பிட்ட தடுப்பூசி மருந்துகளை பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக 4 பாகை தொடக்கம் 8பாகை வரையிலான குளிர்சாதனப்பெட்டியில் வைக்கப்படவேண்டிய தடுப்பூசி மருந்து கிட்டத்தட்ட 15மணித்தியாலம் 28 பாகை வெப்ப நிலையில் வெளியிலிருந்துள்ளது.

தற்போது தடுப்பூசிக்கு அதிக மதிப்புள்ள காலகட்டத்தில் அதிகாரிகள் இவ்வாறான அசமந்தப்போக்கினை தவிர்ப்பது சாலப் பொருத்தம் என பொதுசனங்கள் பேசிக்கொள்கின்றனர்.

## குறிஞ்சாக்கேணி பாலத்தின் தற்காலிக படகு சேவையை இலவசமாக

இந்த நிலையில் மக்கள் போக்குவரத்துக்காக தற்காலிக பயண ஏற்பாடாக இழுவை படகு சேவை நேற்று தனியார் ஒருவரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதில் பயணக் கட்டணமாக ஒருவருக்கு 20 ரூபா அறவிடப்படுகின்றது.

இது தொடர்பாக பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

ஒரு பயணி பல முறை இதனூடாக பயணம் செய்ய வேண்டி ஏற்பட்டால் இப்பயணத்திற்காக பல நூறு ரூபாய்களை செலவு செய்ய வேண்டிய நிலை ஏற்படும் என்று விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையிலேயே மிக நீளமான கிண்ணியா பாலம் கட்டுவதற்கு முன்பாக இயந்திர பாதை மூலமே அப் பெரும் கடலை கடந்து மக்கள் பயணம் செய்தனர். இதற்காக எந்தவொரு பணமும் பயணிகளிடமிருந்து அறவிடப்படவில்லை. ஆனால் இந்த இழுவைப் படகுக்கு கட்டணம் அறவிடுவது எந்த வகையிலும் நியாயமாகாது என பலரும் கருத்து தெரிவிக்கின்றனர். கிண்ணியா குறிஞ்சாக்கேணி பாலம் சரியான திட்டமிடல் இல்லாத காரணத்தால் அப்பாவி பொது மக்களின் பணத்தை உறிஞ்சு குடிக்கும் நிலை ஏற்பட்டிருக்றது எனதேசிய விடுதலை மக்கள் முன்னணியின் தலைவர் முஸம்மில் மொஹிதீன் தெரிவித்தார்.

இந்த பாலம் கட்டி முடியும் வரை தனியார் இழுவை பாதைக்கு கட்டணமாக பாதசாரிகள் கொடுக்க வேண்டிய கூலி 46 மில்லியன் ரூபாவாக இருக்கும் என்றும் இவை பொது மக்களின் பணத்தை சூரையாடும் திட்டம் என்றும் தெரிவித்த அவர், அரசியல் தலைவர்களின் திட்டமிடல் இல்லாத செயற்பாட்டின் வெளிப்பாடு இதன் மூலம் தெளிவாகிறது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஒரு பாதையோ பாலமோ திருத்தவேலை நடக்கின்றபோது அதற்குப்பதிலாக தற்காலிக போக்குவரத்து வசதி அமைத்து கொடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.

இந்த நிலையில், வீதி அபிவிருத்தி அதிகார சபையே பயணிகளிடம் கட்டணம் அறவிடாது இலவச சேவை வழங்க வேண்டும். அல்லது கிண்ணியா பிரதேச சபையும், நகரசபையும் இதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும் என பொதுமக்கள் கருத்து தெரிவிக்கின்றனர்

## திமுகவின் வெற்றி இலங்கை தமிழர்களுக்கு அர்த்தமுள்ள

முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார். தமிழக சட்டசபை தேர்தலில் அ.தி.மு.க உள்ளிட்ட கட்சிகளை பின்தள்ளி தி.மு.க அமோக வெற்றிப்பெற்றுள்ளது.

திமுக வெற்றிப் பெற்றதால் புதிய தமிழக முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் தெரிவாகியுள்ளதுடன் அவர் எதிர்வரும் 6 ஆம் திகதி முதலமைச்சராக பதவியேற்பார் என தெரிவிக்கப்படுகின்றது. இந்த நிலையில் ஸ்டாலினின் வெற்றிக்கு வாழ்த்துக்களை தெரிவித்து இராதாகிருஸ்ணன் ஊடகங்களிடம் மேற்கண்ட விடயத்தை கூறியுள்ளார்.

மேலும் திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைவர் மு.க ஸ்டாலின் இரு நாட்டு மீனவர் பிரச்சினைக்கும் நிரந்தர தீர்வு வழங்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் திமுக வின் வெற்றி இலங்கை தமிழர்களுக்கு அர்த்தமுள்ள வெற்றியாக அமையும் என எதிர்பார்ப்பதாகவும் வே.இராதாகிருஸ்ணன் மேலும் தெரிவித்துள்ளார்.

## மட்டு.தனியார் ஆடைத்தொழிற்சாலையில் தொழிபுரியும் இளம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கி வரும் தனியார் ஆடை தொழிச்சாலையில் தொழில் புரிந்து வந்த நிலையில் சம்பவ தினமான நேற்று முன்தினம் மே தின விடுமுறை என்பதனால் தனது வீட்டில் மதிய உணவினை உண்டு விட்டு தனது படுக்கை அறைக்கு சென்று உறங்கியிருக்கின்றார் பின்னர் அவரின் தாயார் தேனீர் கொடுப்பதற்காக அவரின் படுக்கை அறையினை தட்டிய போது எவ்விதமான சத்தமும் வராத நிலையில் கதவினை கத்தியால் உடைத்து திறந்த போது தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகவும் இவரின் தற்கொலைக்கு காரணம் காதல் விவகாரமே என விசாரணைகளின் போது அறிய முடிந்துள்ளது.

ஏறாவூர் நீதிமன்ற பதில் நீதிவான் அவர்களின் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்திற்கு சென்ற ஏறாவூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.நசீர் சடலத்தை பார்வையிட்ட பின்னர் பிரேதத்தை பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டார். சம்பவம் பற்றிய மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஸ்டாலின் தலைமையில் தமிழக ஆட்சி! தமிழினம் விடுதலை

தளபதி மு.க.ஸ்டாலின் தலைமையில் தமிழகத்தின் ஆட்சி அமைவதனால் இலங்கைத் தமிழரின் இன விடுதலைக்கும் பேராதரவு கிடைக்குமென நம்பிக்கை கொண்டுள்ளோம்.

இலங்கைத் தமிழினமும், தமிழர் தேசமும் விடுதலை பெறுவதற்கும் அனைத்துக் கட்சிகளுடனும் மத்திய அரசுடனும் இணக்கம் கொண்டு செயற்படுவதற்கும் வாய்ப்பு ஏற்படும் என நம்புகிறோம் என தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவை தேர்தலில் தி.மு.க கூட்டணியின் வெற்றி உறுதியாகியுள்ள நிலையில், அந்த கூட்டணியின் வெற்றிக்கு வாழ்த்து தெரிவித்து மாவை சோ.சேனாதிராசா வெளியிட்டுள்ள செய்தியிலேயே இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அந்த செய்தியில் மேலும்,

தமிழகத் தேர்தலில் திமுக கூட்டணியின் மாபெரும் வெற்றிக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

நடைபெற்ற தமிழ் நாட்டின் சட்டசபைத் தேர்தலில் திமுக தலைமையயில் கூட்டணிக் கட்சிகள் பெரு வெற்றி பெற்றமை இலங்கைத் தமிழர்களுக்குப் பெரு மகிழ்ச்சியேதான்.

தளபதி மு.க.ஸ்டாலின் தலைமையில் தமிழகத்தின் ஆட்சி அமைவதனால் இலங்கைத் தமிழரின் இன விடுதலைக்கும் பேராதரவு கிடைக்குமென நம்பிக்கை கொண்டுள்ளோம். இலங்கைத் தமிழினமும், தமிழர் தேசமும் விடுதலை பெறுவதற்கும் அனைத்துக் கட்சிகளுடனும் மத்திய அரசுடனும் இணக்கம் கொண்டு செயற்படுவதற்கும் வாய்ப்பு ஏற்படும் என நம்புகிறோம்.

திராவிட இயக்கத் தலைவர் தமிழ் நாட்டு மக்கள் தலைவர் கலைஞர் கருணாநிதியின் கொள்கை வழி நின்று எதிர்காலத்திலும் தலைவர், தளபதி முதலமைச்சர் ஸ்டாலின் தமிழகத்தின் வெற்றிக்கும் உழைத்திட இலங்கைத் தமிழர் தரப்பில் அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும், வெற்றி பெறவைத்த மக்களுக்கும் எம் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## 10 வருடங்களுக்கு பின்னர் தமிழகத்தில் உதயமானது உதயசூரியன்

வங்காளம், அசாம் ஆகிய மாநிலங்களுக்கு பல்வேறு கட்டங்களாக சட்டசபை தேர்தல் நடத்தப்பட்டது. தமிழகத்தில் கடந்த மாதம் 6 ஆம் திகதி ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெற்றது. அந்ததேர்தலில் 72.78 சதவீத வாக்குகள் பதிவானது.

நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணிக்கு தமிழகம் முழுவதும் 75 மையங்களில் வாக்கு எண்ணிக்கை நடைபெற்றது.

இதில் தி.மு.க கூட்டணி 159 இடங்களிலும் அ.தி.மு.க கூட்டணி 75 இடங்களிலும் வெற்றி பெற்றன. பத்து வருடங்களின் பின்னர் திராவிட முன்னேற்றக் கழகம் பெற்றுள்ள அபார வெற்றியாக இது பார்க்கப்படுகின்றது.

இதன்படி தமிழகத்தில் கடந்த பத்து வருடங்களின் பின்னர் மு.க.ஸ்டாலின் தலைமையில் தமிழகத்தில் தி.மு.கவின் ஆட்சி மலர்கிறது. இந்த நிலையில் தமிழகத்தின் அடுத்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு வாழ்த்துக்கள் என பல பிரபலங்கள் தங்களது சமூக வலைத்தளங்களில் வாழ்த்துக்களை பதிவிட்டு வருகின்றனர்.

இதேவேளை, தி,மு.க சார்பில் போட்டியிட்ட ஸ்டாலினின் மகனும் பிரபல நடிகருமான உதயநிதி ஸ்டாலின் தனது தந்தையை விட அதிக வாக்குகளைப் பெற்று அமோக வெற்றியை தனதாக்கிக் கொண்டுள்ளார்.

## மட்டக்களப்பை அச்சுறுத்தும் கொரோனா திசவீரசிங்கம் பகுதி

கொரோனா தொற்றுதி கண்டறியப்பட்டுள்ளதையடுத்து இந்த முடிவு எட்டப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மாவட்ட செயலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அவசர கொரோனா தடுப்பு செயலணி கூடி எடுக்கப்பட்ட தீர்மானத்தை அறிவிக்கும் ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள திசவீரசிங்கம் சதுக்கத்தை சேர்ந்த ஒருவர் வெள்ளிக்கிழமை நோய் காரணமாக வைத்தியசாலைக்கு சென்ற போது அவருக்கு மேற்கொண்ட பி.சி.ஆர் பரிசோதனையில் அவருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டது. இதனையடுத்து அந்த பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை 24 பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதையடுத்து அதில் 11 பேருக்கு தொற்றுறுதி கண்டறியப்பட்டது.

அதேவேளை, மாவட்டத்தில் கடந்த 24 மணித்தியால த்தில் மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 12 பேருக்கும், களுவாஞ்சிக்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 4 பேருக்கும், ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 8 பேருக்கும், வாகரை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 2 பேருக்கும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உட்பட 32 பேருக்கு தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து அந்த பகுதிக்கு பொலிசார், இராணுவத்தினர், பிரதேச செயலாளர், கிராம சேவையாளர், பொது சுகாதார உத்தியோகத்தர் சென்று பார்வையிட்டு அந்த பகுதி வீதிகளை மூடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அந்த பகுதியில் இருந்து உள்நுழையவோ வெளியேறவோ முடியாதவாறு இராணுவத்தினர், பொலிசார் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SwissLife Select

சுவிசில் சொந்த வீடு வாங்க விரும்பும் உறவுகளே, அவதானமாகச் செயற்படுங்கள். உங்கள் கடனுக்கான வட்டி வீதம் எப்போதும் அதிகரிக்க கூடும். எனவே, சரியான வங்கியையும், வட்டி வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும் உங்களோடு கரங் கோர்க்கும் ஒரே ஒரு நிறுவனம்...


மருத்துவ காப்புறுதி


வாகனக் காப்புறுதி


குழந்தைகளுக்கான காப்புறுதி


ஆயுட் காப்புறுதி


சட்டக் காப்புறுதி



Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598

Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.

Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65



# உதயகுமார் கல்வி நிலையம்



முனைக்காடு மேற்கு, கொக்கட்டிச்சோலை

தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923

n.uthayakumar1981@gmail.com



SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28

வீட்டுக்கடன் 0.62% தொடக்கம்

10% இல் சொந்த வீடு கட்ட அல்லது வாங்க

- இருக்கும் வீட்டை வைத்து இன்னொரு வீட்டை வாங்க...
- வீடு வாங்க. விற்க, கட்ட, திருத்த...
- வீடு வாங்குவதற்கான ஆயுட்காப்புறுதி
- Architect வேலைகள்

இலங்கையில் வீடுகள், காணிகள், விற்க, வாங்க, கட்ட, திருத்த

இலங்கைக்கு போக வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து கொண்டே செய்யலாம்.

» கிறங்கன்காசே » பயணக்காப்புறுதி
» ஆயுட்காப்புறுதி » சட்டக் காப்புறுதி





SRI JEWELLERY

Swiss, Zürich இல் மிகப் பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்

பரம்பரை பரம்பரையாக நகைத் தொழிலில் அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்

வைர தாலி கொடி, மோதிரம், வளையல் பெயர் பெண்டன், மற்றும் அனைத்து நகைகளும் செய்து தரப்படும்.

திருத்த வேலைகளும் உடனுக்குடன் செய்து தரப்படும்.

+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch



MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்

MBZ

கல்வியே துணை
பள்ளித் தலைமனைத்தும் பேரெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM

Mathe மகேந்திரா-வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com

MATHE மட்டுமல்ல
Deutsch, Franzósisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen



Aaran Ayurveda
& Wellness Massage



Weinberg Strasse - 22, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | 077 982 1291 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரிசாட் பதியுதீனை விடுதலை செய்யுமாறு கோரி சாளம்பைக்குளத்தில் ஆர்ப்பாட்டம்







மக்கள்காங்கிரஸ்தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் மற்றும் அவரது சகோதரரை விடுதலை செய்யுமாறு கோரி, வவுனியா, புதியசாளம்பைக்குளம் பள்ளிவாசலுக்கு முன்பாக நேற்று ஞாயிற்றுக்கிழமை கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த ஆர்ப்பாட்டக்காரர்கள்,எமது தலைவர் ரிஷாட் பதியுதீனின் ஜனநாயக விரோத கைதினை வன்மையாகக் கண்டிக்கின்றோம். அவர் அதிகாலையில் கைது செய்யப்பட்டதையிட்டு வேதனையடைகின்றோம். அரசாங்கம் தன்னுடைய தோல்வியை மறைப்பதற்காக இவ்வாறான கைதுகளை முன்னெடுத்து வருகின்றது.

அவர் அமைச்சராகவிருந்த காலம்தொட்டு பல்வேறு அபிவிருத்திகளை வன்னி மாவட்டத்திலே முன்னெடுத்தவர். எனவே அவர் விடுதலை செய்யப்பட வேண்டும். நாட்டின் ஆட்சியாளர்கள் இந்த விடயத்தில் கவனம் செலுத்தவேண்டும் என்றனர்.

# நுவரெலியா -வலப்பனை -நில்தண்டாஹின்ன பகுதி தனிமைப்படுத்தப்பட்டுள்ளது






(க.கிஷாந்தன்)

நுவரெலியா - வலப்பனை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட நில்தண்டாஹின்ன பகுதி நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது என்று வலப்பனை சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

வலப்பனை பிரதேச செயலகத்திற்குட்பட்ட நில்தண்டாஹின்ன கிராம சேவக பிரிவிற்குட்பட்ட 4 பகுதிகள் இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த பகுதிகளில் பலருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களுடன் தொடர்பில் இருந்தவர்களுக்கும் வைரஸ் தொற்றியுள்ளது.

இந்நிலையிலேயே வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்தும் நோக்கில் நில்தண்டாஹின்ன முடக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் இருந்து வெளியேறுவதற்கும், நபர்கள் உள்ளே வருவதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் உள்ளவர்களிடம் பி.சி.ஆர் பரிசோதனைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடதக்கது.

# ரிசாட் பதியுதீனை விடுதலை செய்யக்கோரி புத்தளத்திலும் ஆர்ப்பாட்டம்




அநியாயமான முறையில் கைது செய்யப்பட்டு, தொடர்ந்தும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீனை உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென கோரி புத்தளத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

புத்தளம், கொழும்பு முகத்திடலில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், புத்தளம் மாவட்டத்திலிருந்து ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த பிரமுகர்களும், மக்கள் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினர்கள், முக்கியஸ்தர்கள் மற்றும் ஆதரவாளர்கள் இதில் கலந்துகொண்டு, ரிஷாட் பதியுதீனை விடுதலை செய்ய வேண்டுமென கோஷங்களை எழுப்பினர்.





சுலோக அட்டைகள் மற்றும் பதாதைகளுடன் சமூக இடைவெளிகளைப் பேணி நின்ற இவர்கள், எங்கள் தலைவனை விடுதலை செய். ரிஷாட் பதியுதீனை ஏன் விடுதலை செய்தாய்? அதற்கான காரணத்தை வெளிப்படுத்து? நீதி செத்துவிட்டதா? போன்ற கோஷங்களுடன், மிகவும் ஆக்ரோஷமாகவும் உணர்ச்சிவசப்பட்டும் ஆர்ப்பாட்டம் செய்ததை காண முடிந்தது.

இங்கு கருத்து தெரிவித்த கல்பிட்டி பிரதேச சபை உறுப்பினர் ஆஷிக் கூறுகையில், எந்தக் குற்றமும் செய்யாத அவரை இன்னும் தடுப்புக் காவலில் வைத்திருப்பதன் நோக்கம் என்ன என்று கேள்வியெழுப்பியதுடன், நேர்மையாக விசாரணைக்கு அழைக்காமல் நள்ளிரவிலே அவரை கைது செய்தது அரசியல் பழிவாங்கல் என்றார்.

மன்னார் பிரதேச சபை தவிசாளர் முஜாஹிர் கருத்து தெரிவிக்கையில், இதுவரை காலமும் நடந்த அத்தனை விசாரணைகளிலும் தமது தலைவன் குற்றமற்றவர் என பகிரங்கமாக அறிவிக்கப்பட்டிருந்த போதும், இப்போது அவசர அவசரமாக தடுத்து வைக்கப்பட்டு, விசாரணை என்ற போர்வையில், விடுதலை செய்யாமல் இருப்பது எதோ ஒரு உள்நோக்கத்துக்கவே என்றார்.

# திருகோணமலையில் கடைகளை மூடுமாறு நகரசபை ஒலிபெருக்கி மூலம் அறிவுறுத்தல்





(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலையில் அத்தியாவசிய தேவை பொருட்கள் விற்பனை தவிர்ந்த ஏனைய விற்பனை நிலையங்களை மூடுமாறு நகரசபை ஒலிபெருக்கி மூலம் அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

இவ்வறிவுறுத்தலை திருகோணமலை நகரசபை நேற்று ஒலிபெருக்கி மூலம் பொதுமக்களுக்கு தெரியப்படுத்தியுள்ளது.

கொவிட் அடுப்பு செயலணி மற்றும் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகம் விடுத்துள்ள கோரிக்கைக்கு அமைவாக இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாக திருகோணமலை நகரசபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்பொழுது திருகோணமலை மாவட்டத்தில் கொரோனா தொற்று அதிகரித்து வருவதால் வெளியூரில் இருந்து பொருட்களை கொள்வனவு செய்வதற்காக அதிகளவிலான மக்கள் வருகை தருவதாகவும் இதனூடாக தொற்று அதிகரித்துள்ளமையினால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

குறிப்பாக அத்தியாவசிய தேவைகள் தவிர்ந்த அனைத்து கடைகளையும் மூடி ஒத்துழைப்பு வழங்குமாறும் திருகோணமலை நகரசபை பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு மக்களை கொவிட் தொற்றிலிருந்து பாதுகாக்கும் விழிப்புணர்வு செயற்பாடு

## மாவட்ட செயலகம் முன்னெடுப்பு



(கல்லடி, மட்டக்களப்பு நிருபர்கள்)

மட்டக்களப்பு மாவட்டத்தையும் மீண்டும் அச்சுறுத்த ஆரம்பித்துள்ள கொவிட் 19 வைரஸின் மூன்றாவது அலையிலிருந்து எமது மக்களை பாதுகாத்து, கொவிட் 19 தொற்றுப் பரவலை மாவட்டத்திற்குள் கட்டுப்படுத்துவதற்கான பல்வேறுபட்ட விழிப்புணர்வு நடவடிக்கைகள் மாவட்டம் பூராகவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மட்டக்களப்பு மாவட்ட கொவிட் 19 தடுப்புச் செயலணியானது மாவட்டம் பூராகவும் பல்வேறுபட்ட நடவடிக்கைகளை மாவட்ட அரசாங்க அதிபரும், மட்டக்களப்பு மாவட்ட கொவிட் 19 செயலணியின் தலைவருமாகிய கே.கருணாகரன் அவர்களது ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் சுகாதாரத்துறையினரின் பாரிய பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதற்கமைவாக மட்டக்களப்பு மாவட்ட மக்களை கொவிட் 19 தொற்றிலிருந்து எவ்வாறு தம்மைத் தாமே பாதுகாத்துக்கொள்வது, கொவிட் தடுப்பு மருந்து ஏற்றுவதன் ஊடாக நாம் அடையும் நன்மை தொடர்பாகவும் விழிப்புணர்வூட்டும் நடவடிக்கையினை சர்வோதயம் முன்னெடுத்துவருகின்றது.

அதன் ஒரு அங்கமாக சர்வோதய சுவோதய நடமாடும் பிரிவின் ஊடாக முன்னெடுக்கப்படும் நடமாடும் டிஜிட்டல் வாகனத்தின் கொவிட் 19 விழிப்புணர்வு செயற்பாடுகள் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தலைமையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு மாவட்ட செயலக வளாகத்தில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி நாகலிங்கம் மயூரன், மட்டக்களப்பு சர்வோதயத்தின் வெளிக்கள பணிப்பாளர் ஈ.எல்.ஏ.ஹரீம் உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டம் பூராகவும் 5 நாட் செயற்பாடாக இடம்பெறவுள்ள குறித்த விழிப்புணர்வு



செயற்பாடானது வீடியோ கானொளி, விழிப்புணர்வு துண்டுப்பிரசுரம் மற்றும் ஸ்டிக்கர் ஒட்டும் செயற்பாடுகள் ஊடாக மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலக பிரிவுகளிலும் முன்னெடுக்கப்படவுள்ளது.

சர்வோதயத்தின் தலைவர் சமூக நல விசேட வைத்திய நிபுணர் வின்னயா ஆரியரத்ன அவர்களது ஆலோசனை மற்றும் வழிகாட்டவில் இவ்வாறான விழிப்புணர்வு செயற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது

# நீதிமன்ற உத்தரவையும் மீறி போராட்டம்

## போராட்டகாரர்களுக்கு கட்டாய பீ.சி.ஆர்.பரிசோதனை

(பாறுக் ஷிஹான்)

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனைத் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்ற கோஷத்துடன் கல்முனை மாநகரில் நேற்று ஞாயிற்றுக்கிழமை கண்டன போராட்டம் முன்னெடுக்க ஆயத்தமான நிலையில் கல்முனை நீதவான் நீதிமன்றத்தினால் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய கொள்கை பரப்புச் செயலாளரும், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான கே. எம். ஏ. ஜவாத், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் கல்முனை அமைப்பாளரும் கல்முனை



மாநகர சபை உறுப்பினருமான எம்.ஐ.எம். அப்துல் மனாப், கல்முனை மாநகர சபை உறுப்பினர் வை.கே ரஹ்மான், கல்முனை மாநகர சபை உறுப்பினர் பீ.எம். ஷிபான், கலில் முஸ்தபா, பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப், உயர்பீட உறுப்பினர் மான் குட்டி ஜுனைதீன் ஆகியோருக்கு எதிராக தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இவ்வுத்தரவை கல்முனை பொலிஸ் நிலைய தலைமை பொலிஸ் பரிசோதகர் கே.எச்.சுஜித் பிரியந்த பெயர் குறித்தவர்களிடம் கையளித்தார்.



நீதிமன்ற உத்தரவையும் மீறி கல்முனை நகர் மத்தியில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் அம்பாறையின் பல பாகங்களிலும் இருந்து வருகை தந்த மக்கள் பிரதிநிதிகள், கட்சி ஆதரவாளர்கள் என பலரும் பங்கேற்றனர். தலைவர் ரிஷாத் பதியுதீனை விடுதலை செய் , ரிஷாத்தை அநீதியான முறையில் தொடர்ந்தும் தடுப்புக் காவலில் வைத்திருக்காதே !. ரிஷாத்தை நள்ளிரவில் கைது செய்ததன் பின்னணி என்ன ?, யாரைத் திருப்திப்படுத்த இந்தக் கைது ? போன்ற சுலோக அட்டைகளை ஏந்தி கோஷமெழுப்பிய போது கல்முனை பொலிஸார் புகுந்து இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்ததுடன் சுலோகங்களை பறித்து போராட்டக்காரர்களுக்கு கட்டாய பீ.சி.ஆர் பரிசோதனையும் செய்தனர்.

கல்முனை பொலிஸாரின் கெடுபிடியினால் அங்கிருந்து வெளியாகி சென்ற போராட்டக்காரர்கள் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாவடிப்பள்ளியில் தலைவர் ரிஷாத் பதியுதீனை விடுதலை செய் , ரிஷாத்தை அநீதியான முறையில் தொடர்ந்தும் தடுப்புக்காவலில் வைத்திருக்காதே !. ரிஷாத்தை நள்ளிரவில் கைது செய்ததன் பின்னணி என்ன ?, யாரைத் திருப்திப்படுத்த இந்தக் கைது ? போன்ற சுலோக அட்டைகளை ஏந்தி கோஷமெழுப்பி நீளமான பதாதைகளை தாங்கியவாறு . சமூக இடைவெளிகளைப் பேணி இந்தப் போராட்டத்தை மீண்டும் தொடர்ந்து மேற்கொண்டனர் இதன் போது ரிஷாத்தின் கைதுக்கு எதிராகவும், அரசுக்கு எதிராகவும் போராட்டக்காரர்களால் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் சார்பிலான திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி முஷாரப் முதுனபின், அகில மக்கள் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினர்களான நிந்தவூர் பிரதேச சபை தவிசாளர் அஸ்ரப் தாஹிர், அட்டாளைச்சேனை பிரதேச சபை முன்னாள் தவிசாளர் சட்டத்தரணி எம்.ஏ.அன்சில் உட்பட பலரும் இந்தப்போராட்டத்தில் கலந்துகொண்டு தமது கருத்துக்களை வெளியிட்டனர் .போராட்டம் இடம்பெற்ற வேளை சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ். ஜெயலத் தலைமையிலான பொலிஸார் ஆங்காங்கே குவிக்கப்பட்டு வீதி ஒழுங்கமைப்பிலும், ஆர்ப்பாட்டக்காரர்களை கட்டமைப்பதிலும் ஈடுபட்டனர்.

# வடக்கு கடற்பரப்பின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது



இலங்கையின் வடக்கு கடற்பரப்பின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக கடற்படையினர் அறிவித்துள்ளனர். இந்தியாவில் நிலவி வரும் கோவிட் பெருந்தொற்று நிலைமைகளினால் இந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கோவிட் பெருந்தொற்று தீவிரமடையும் நிலையில் இந்தியர்கள் அண்டை நாடுகளுக்கு தப்பிச் செல்ல முயற்சிப்பதாக கடற்படை பேச்சாளர் கெப்டன் இந்திக்க டி சில்வா தெரிவித்துள்ளார்.

எனவே வடக்கு எல்லைப் பகுதியை பாதுகாப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். வடக்கு கடற்பரப்பு மற்றும் கரையோரப் பகுதிகளில் தீவிர ரோந்துப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும், சில இந்தியர்கள் படகு மூலம் நாட்டுக்குள் அண்மைய நாட்களில் பிரவேசித்துள்ளமை குறித்து தகவல்கள் கிடைத்துள்ளதாக கடற்படை பேச்சாளர் ஆங்கில ஊடகமொன்றுக்கு மேலும் தெரிவித்துள்ளார்.

Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
sikaramgmbh@gmail.com / www.sikaram.com
Tel : 044 2410241
Fax : 044 2410245

# கொட்டகலை பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவர் பலத்த காயம்

( க.கிஷாந்தன்)

நுவரெலியா - அட்டன் பிரதான வீதியில் நேற்று முன்தினம் இரவு கொட்டகலை கொமர்ஷல் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் பலத்த காயங்களுக்குள்ளாகியுள்ளதாக திம்புள்ள பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

முச்சக்கரவண்டியில் பயணித்த ஒரே குடும்பத்தில் தாய், தந்தை மற்றும் மகன் ஆகியோரே இவ்வாறு காயமடைந்து சிகிச்சைக்காக டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தலவாக்கலை பகுதியிலிருந்து அட்டன் நோக்கி சென்ற வேன் ஒன்று, கொட்டகலை பகுதியிலிருந்து கொமர்ஷல் பகுதியை நோக்கி சென்ற முச்சக்கரவண்டியுடன் பின்புறத்தில் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.



வேன், முச்சக்கரவண்டியுடன் மோதிய பின், முச்சக்கரவண்டி வீதியை விட்டு விலகி அருகில் இருந்த கற்பாறையுடன் மோதி பலத்த சேதத்திற்குள்ளாகியுள்ளது.

வேன் சாரதி திம்புள்ள பத்தனை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை திம்புள்ள பத்தனை போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நுவரெலியாவில் 5 பொலிஸ் அதிகாரிகளுக்கு கொரோனா

(க.கிஷாந்தன்)

நுவரெலியா பொலிஸ் நிலையத்தின் பெண் உப பொலிஸ் பரிசோதகர் மற்றும் போக்குவரத்து பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் அதிகாரிகள் 5 பேருக்கு கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவர்கள் கண்டி வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுப்பப்பட்டுள்ளதாக நுவரெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

எனினும், பொலிஸ் போக்குவரத்து பிரிவு தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாகவும், ஏனைய அதிகாரிகளை கொண்டு பணிகள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தொற்றாளர்கள் நுவரெலியா வசந்த கால கொண்டாட்டங்களில் கடமை புரிந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை நேற்று கண்டி மாவட்டத்தில் 84 பேருக்கும், நுவரெலியா மாவட்டத்தில் 56 பேருக்கும் கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டமை குறிப்பிடதக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவுக்காக கூரையை உடைத்து காட்டு யானை அட்டகாசம்!

## செல்வபுரத்தில் சம்பவம்: மரவள்ளிக்காலை சேதம்

(வி.ரி.சகாதேவராஜா)

உணவுக்காக அதிகாலையில் கூரையை பெயர்த்து யானை அட்டகாசம் செய்துள்ளது. இச்சம்பவம் நேற்று(02) அதிகாலை 3மணியளவில் இடம்பெற்றுள்ளது.

பொத்துவிலையடுத்துள்ள கோமாரிப்பிரிவிலுள்ள செல்வபுரம் கிராமத்தில் இடம்பெற்றுள்ளது. அதேவேளை கோமாரி பிரதேசத்தில் மரவள்ளிக்காலையை சேதப்படுத்தியுள்ளது. இவ்வாறு தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் யானைத்தாக்கத்தால் கோமாரிக்கிராமமே அச்சத்தில் மூழ்கியுள்ளது.

அங்கு புகுந்த காட்டு யானைகள் சின்னதம்பி செல்வராசா என்ற குடும்பஸ்தரைத் தாக்கிவிட்டு அவரது வீட்டின் கூரையை உடைத்து உள்ளிருந்த நெல் அரிசி பச்சை இலைக்கறிகளை உண்டது. வீட்டையும் துவம்சம் செய்தது. நித்திரையிலிருந்த செல்வராசா என்ற குடும்பஸ்தர் ஓடி மயிரிழையில்



உயிர்தப்பியுள்ளார்.

அத்துடன் நின்றுவிடாது அருகிலுள்ள மரவள்ளிக்காலைகளுக்கும் சென்று பயிர்பச்சைகளையும் சேதப்படுத்தியுள்ளது.

இவ்வாறு சேதமாக்குவதால் கிழங்கு பெரிதாகமுன்னரே நேற்று அவற்றைப்பிடுங்கி வீதிகளில் விற்பனை செய்வதைக் காணக்கூடியதாயிருந்தது.

இது தொடர்பாக த.தே.கூட்டமைப்பின் பொத்துவில் பிரதேசசபை உறுப்பினர் த.சுபோதரன் நேரில் சென்று பார்வையிட்டு சேதவிபரத்தை கிராமசேவை உத்தியோகத்தரிடம் அறிவித்துள்ளார்.

கூடவே கிராமஅபிவிருத்திச்சங்க தலைவர் ஜோய் நோக்கிரட்டும் சென்றுள்ளார்.

உறுப்பினர் த.சுபோதரன் இதுவிடயத்தை லாகுகலையிலுள்ள வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

இதற்கு முன்னரும் இவ்வாறு பலதடவைகள் அவர்களிடம் தெரிவித்தபோதிலும் அவர்கள் வந்து பார்ப்பதில்லை என பொதுமக்களும் உறுப்பினரும் குற்றம் சாட்டுகின்றனர்.

அதேவேளை கிராமசேவை உத்தியோகத்தர் மேல் நடவடிக்கை எடுப்பதாகக்கூறியுள்ளார்.

பாதிக்கப்பட்ட அக்குடும்பம் நிர்க்கதியாகியிருப்பது குறிப்பிடத்தக்கது.

# கல்முனை மாநகர பிரதேசங்களில் களைகட்டும் பண்டிகை வியாபாரம்

## பிந்திய இரவுகளிலும் கடும் உன்னிப்பாக கண்காணிக்கும் சுகாதார படை!

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.எம்.அல் அமீன் றிசாட் மற்றும் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் ஆகியோரின் கண்காணிப்பில் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஜே.நிஸ்தாரின் நெறிப்படுத்திலில் பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.எம்.எம்.பைசால் தலைமையிலான குழு சாய்ந்தமருது பிரதேசத்தில் கொவிட்-19 யினை கட்டுப்படுத்துமுகமாக பொது இடங்களுக்கு திடீர் விஜயம் சனிக்கிழமை இரவு வரை மேற்கொண்டனர். இந்த கள விஜயத்தில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் சாய்ந்தமருது பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பட்டதாரி பயிலுநர்கள்,பல்நோக்கு அபிவிருத்தி செயலணி திணைக்களத்தின் பயிலுநர்களும் கலந்து கொண்டனர்.

வெசாக் மற்றும் நோன்பு பெருநாள் பண்டிகை காலம் என்பதனால் மக்கள் புத்தாடைகள் மற்றும் பண்டிகை கால கொள்வனவில் சாய்ந்தமருது வர்த்தக நிலையங்களில் பரபரப்பாக இயங்கிவருவதனால் சாய்ந்தமருது-



மாளிகைக்காடு வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் தொடர்ச்சியாக ஒலிபெருக்கி மூலம் மக்களுக்கு சுகாதார விழிப்புணர்வும், அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் மருதமுனையிலும் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.ஆர். எம். அஸ்மி, பொதுச்சுகாதார பரிசோதகர்கள், கல்முனை பொலிஸ ார் மற்றும் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய உத்தியோகத்தர்களும் இணைந்து கொவிட்-19 யினை கட்டுப்படுத்துமுகமாக வர்த்தக நிலையங்களுக்கும், மக்கள் கூடும் இடங்களுக்கும் திடீர் விஜயம் மேற்கொண்டு சுகாதார வழிமுறைகளை பின்பற்றாதோர் மீது நடவடிக்கை எடுத்ததுடன், கொவிட்-19 பரிசோதனைகளையும் மேற்கொண்டனர்.

# சாய்ந்தமருது, காரைதீவு வைத்தியசாலைகளில் கொவிட் 19 தடுப்பூசியின் இரண்டாம் கட்டம் வழங்கும் நிகழ்வு!



(நூருல் ஹுதா உமர்)

கொவிட் 19 தடுப்பூசியின் இரண்டாம் கட்டம் வழங்கும் நிகழ்வு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜீ.சுகுணனின் ஆலோசனையுடன் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.எம். அல் அமீன் றிசாட் தலைமையில் சாய்ந்தமருது மாவட்ட வைத்தியசாலையில் சனிக்கிழமை நடைபெற்றது.

இந் நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் முன்னாள் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் ரி.எஸ்.ஆர். ரி.றஜாப், சாய்ந்தமருது மாவட்ட வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் சனூஸ் காரியப்பர், டெங்கு மலேரியா தடுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் நௌசாத், சாய்ந்தமருது மாவட்ட வைத்தியசாலையின் வைத்தியர் ஜீவராணி சிவசுப்ரமணியம், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்கள் மற்றும் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டு தடுப்பூசியினை பெற்றுக் கொண்டனர்.

மேலும் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா பஷீரின் தலைமையில் காரைதீவு வைத்தியசாலையில் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய மேற்பார்வை பொதுச்சுகாதார பரிசோதகர், பொதுச்சுகாதார பரிசோதகர், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோத்தர்கள், ஊழியர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கு கோவிட் 19 தடுப்பூசியின் இரண்டாம் கட்டம் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

# சாணக்கியனின் அறிவிப்புக்கு மௌனம் காத்துவரும் மு.கா முக்கியஸ்தர்கள் மீது நடவடிக்கை எடுக்க முஸ்தீபு

## : மாநகர சபை உறுப்பினர் அமீர் அறிவித்தார்!

(நூருல் ஹுதா உமர்)

சாணக்கியன் அண்மையில் முஸ்லிங்களின் குரல்வளையை நோக்கி வீசியிருக்கும் கருத்துக்கு அவரது பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணிக்கு ஆதரவு வழங்கிய முன்னாள் எம்.பி, முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபை தவிசாளர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மௌனம் காப்பது ஏன்? மௌனமாக இருந்து அவரின் வடகிழக்கு இணைப்பை ஆதரிக்கிறீர்களா? கல்முனை பிரதேச செயலக விவகாரத்தில் அவரை ஏற்றுக்கொள்கிறீர்களா? வாய்திறக்காமல் மௌனம் காப்பதில் என்ன மர்மம் ஒழிந்துள்ளது என கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஏ.ஏ. அமீர் கேள்வியெழுப்பினார்.

அண்மையில் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன்



வெளியிட்ட கருத்துக்களுக்கு பதிலளிக்குமுகமாக முஸ்லிம் காங்கிரஸ் கல்முனை கட்சி காரியாலயத்தில் சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் அங்கு கருத்து தெரிவித்த அவர்,

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணிக்கு ஆதரவு வழங்கி விட்டு சாணக்கியனின் கருத்துக்கு மௌனம் காத்துவரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பிலான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஆகியோரை உயர்பீடத்தில் கேள்விக்குட்படுத்துமாறு கோரி தலைவரின் இணைப்பாளரூடாக திறந்த அறிக்கையை மக்கள் பிரதிநிதியாக உள்ள நாங்கள் அனுப்ப உள்ளோம். அத்துடன் இந்த பேரணிக்கு ஆதரவளித்த மக்கள் காங்கிரசின் முன்னாள், இந்நாள் பிரதேச சபை தவிசாளர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் உங்கள் நிலைப்பாட்டை அறிவிக்க முன்வரவேண்டும். ஆனால் அவர்கள் இப்படி நம்பிக்கை துஸ்பிரயோகம் செய்வார்கள் என்று நாங்கள் நம்பவில்லை என்றார்.

# நோயாளர்களின் வருகை அதிகரிப்பு: சிற்றூழியர்களை அதிகரிக்குமாறு கோரிக்கை

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை மாவட்டத்தில் தற்போது அதிகரித்துவரும் கொவிட் -19 காரணமாக நோயாளர்கள் திருகோணமலை செல்வதை குறைத்து வருகின்ற நிலையில் மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அதிகளவிலான நோயாளர்கள் வருகை வருவதாக தெரியவருகின்றது.

ஹொரவ்பொத்தான பிரதேச வைத்தியசாலையில் தமிழ் மொழி தெரிந்த ஊழியர்கள் இல்லாமையினால் அப்பகுதியில் உள்ள நோயாளர்களும் இவ் வைத்தியசாலையை நாடி வருவதாகவும் தெரியவருகின்றது.

காரணம் அந்த வைத்தியசாலையில்





தமிழ் மொழி பேசக்கூடிய ஊழியர்கள் இல்லாமையினால் மொழிப் பிரச்சினை முக்கிய பிரச்சினையாக காணப்படுகின்றது.

இதனால் அப்பகுதியில் உள்ள யான்ஓயா,றத்மலை-100 ஏக்கர் மற்றும் றொட்டவெவ,நொச்சிகுளம், சாந்திபுரம், ஜின்னா நகர்,பன்குளம், அவ்வை நகர் நாமல்வத்த போன்ற பகுதிகளைச்சேர்ந்த நோயாளர்கள் இவ் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வருகின்றனர். இவர்களில் அதிகளவிலான நோயாளர்கள் தமிழ் பேசக்கடியவர்கள் எனவும் தெரியவருகின்றது.

மஹதிவுல்வெவ பிரதேச வைத்திய சாலையில் தமிழ் மொழி பேசக்கூடிய ஊழியர்கள் கடமையில் இருப்பதினால் நோயாளர்கள் தங்களுடைய நோய்களை தமிழில் சொல்கின்ற நேரத்தில் அதனை மொழிபெயர்த்து சிங்களத்தில் வைத்தியர்களுக்கு தெரிவிப்பதற்கு ஊழியர்கள் அங்கு காணப்படுகின்றனர்.

ஆனாலும் மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வருபவர்களின் வீதம் அதிகரித்து வருகின்ற நிலையில் ஊழியர்கள் குறைந்த அளவிலேயே இருப்பதாகவும் இதனால் தாமதம் ஏற்படுவதாகவும் நோயாளிகள் குற்றம் சுமத்துகின்றனர்.

குறிப்பாக கோமரங்கடவல பிரதேச வைத்தியசாலை கொரோனா இடைநிலை சிகிச்சை நிலையமாக மாற்றப்பட்டுள்ளதால் நோயாளர்கள் மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலைக்கே வருகை தருவதாகும் தெரியவருகின்றது.

ஆகவே நோயாளர்களின் நலன் கருதி இரண்டு வைத்தியர்கள் கடமையில் இருக்கின்ற போதிலும் ஊழியர்கள் குறைவாக இருப்பதினால் மேலதிகமாக சிற்றூழியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் நோயாளிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org